1984 மார்ச் 26]

142. 1979-80 ஆம் ஆண்டுக்குரிய தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் ஆறாவது ஆண்டு அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

143. 1981-82 ஆம் ஆண்டிற்குரிய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டுக் கணக்குகளுக்குரிய தணிக்கை அறிக்கையும் 31—3—1982 ஆம் நாளன்றுள்ள ஐந்தொகைக் கணக்கும் (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்குதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

144. 1983 ஆம் ஆண்டிற்குரிய சேரன் போக்குவரத்துக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

145. 1983 ஆம் ஆண்டுக்குரிய கும்பகோணம், சோழன் சாலை போக்குவரத்துக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

146. 1982-83 ஆம் ஆண்டிற்குரிய பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

147. 1983 ஆம் ஆண்டிற்கான காரைக்குடி மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் முதல் ஆண்டு அறிக்கை (தமிழ்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

55. வேளாண்மைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85.

56. 1984-85 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை பற்றிய செயல் வினை முறைத் திட்டம் (தமிழ் & ஆங்கிலம்).

57. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் பற்றிய ஆய்வுரை 1983-84 (தமிழ் & ஆங்கிலம்).

58. தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை 1983-84.

59. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை 1983-84 (தமிழ் & ஆங்கிலம்).

60. நாட்டுடமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் & ஆங்கிலம்).

61. நாட்டுடமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுரை 1983-84 (தமிழ் & ஆங்கிலம்).

62. 1983-84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு துறைமுகத் துறை பற்றிய சாதனை விளக்க அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்).

63. மானியக் கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் (தமிழ் & ஆங்கிலம்).

64. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் பற்றிய ஆய்வுரை 1984-85 (தமிழ் & ஆங்கிலம்).

65. எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85 (தமிழ் & ஆங்கிலம்).

66. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் (1979-80) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை.

67. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை.

68. பொதுத் துறை நிறுவனங்களின் செயலாக்கத்தினை விரிவான மதிப்பீடு செய்வதற்காக தணிக்கைக் குழுக்கள் (Audit Boards) ஏற்படுத்துவது குறித்து பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை.

69. இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் 1974-75, 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்கு

வாத்துத் துறை குறித்த பத்திரிக்கைகளின் மீதான எட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை.

* 70. 1984-85 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி (தமிழ் & ஆங்கிலம்).

* 71. 1984-85 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ் & ஆங்கிலம்).

@ 72. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு (தமிழ் & ஆங்கிலம்).

@ 73. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, ஆகியவை பற்றிய செயல்முறைத் திட்டம் (ஆங்கிலம்).

---

* 23—3—1984 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

@ 23—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY